ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருச்சித்ர கூடம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருச்சித்ர கூடம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெருமாள் திருமொழி – அங்கண் நெடுமதிள்

‡ அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும் ⋆
அணி நகரத்துலகனைத்தும் விளக்கும் சோதி ⋆
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி ⋆
விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னைச் ⋆
செங்கண் நெடுங்கரு முகிலை இராமன் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எங்கள் தனி முதல்வனை எம் பெருமான் தன்னை ⋆
என்று கொலோ கண் குளிரக் காணும் நாளே ‖ **10.1** ‖

வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி ⋆
வரு குருதி பொழி தரவன் கணை ஒன்றேவி ⋆
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து ⋆
வல் அரக்கர் உயிர் உண்ட மைந்தன் காண்மின் ⋆
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந் தண் சோலைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த ⋆
அணி மணி ஆசனத்திருந்த அம்மான் தானே ‖ **10.2** ‖

செவ்வரிநற் கரு நெடுங்கண் சீதைக் காகிச் ⋆
சின விடையோன் சிலை இறுத்து மழு வாள் ஏந்தி ⋆
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு ⋆
வேல் வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை ⋆
தெவ்வர் அஞ்சு நெடும் புரிசை உயர்ந்த பாங்கர்த் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எவ்வரிவெம் சிலைத் தடக்கை இராமன் தன்னை ⋆
இறைஞ்சுவார் இணை அடியே இறைஞ்சினேனே ॥ **10.3** ॥

தொத்தலர் பூஞ்சுரி குழல் கைகேசி சொல்லால் ⋆
தொன்னகரம் துறந்து துறைக் கங்கை தன்னை ⋆
பத்தி உடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்குப் ⋆
பரதனுக்கு பாதுகமும் அரசும் ஈந்து ⋆
சித்திரகூடத்திருந்தான் தன்னை ⋆
இன்று தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எத்தனையும் கண் குளிரக் காணப் பெற்ற ⋆
இரு நிலத்தார்க்கிமையவர் நேர் ஒவ்வார் தாமே ॥ **10.4** ॥

வலி வணக்கு வரை நெடுந் தோள் விராதைக் கொன்று ⋆
வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கி ⋆
கலை வணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக் ⋆
கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி ⋆
சிலை வணக்கி மான் மரிய எய்தான் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
தலை வணக்கிக் கை கூப்பி ஏத்த வல்லார் ⋆
திரிதலால் தவம் உடைத்துத் தரணி தானே ॥ **10.5** ॥

தன மருவு வைதேகி பிரியல் உற்றுத் ⋆
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி ⋆
வன மருவு கவி அரசன் காதல் கொண்டு ⋆
வாலியைக் கொன்றிலங்கை நகர் அரக்கர் கோமான் ⋆
சினம் அடங்க மாருதியால் சுடுவித்தானைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
இனிதமர்ந்த அம்மானை இராமன் தன்னை ⋆
ஏத்துவார் இணை அடியே ஏத்தினேனே ॥ **10.6** ॥

குரை கடலை அடல் அம்பால் மறுக வெய்து ⋆
குலை கட்டி மறுகரையை அதனால் ஏறி ⋆
எரி நெடு வேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன் ⋆
இன்னுயிர் கொண்டவன் தம்பிக்கரசும் ஈந்து ⋆
திருமகளோடினிதமர்ந்த செல்வன் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
அரசமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால் ⋆
அரசாக எண்ணேன் மற்றரசு தானே ॥ **10.7** ॥

அம்பொனெடு மணி மாட அயோத்தி எய்தி ⋆
அரசெய்தி அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான் தன் ⋆
பெருந் தொல் கதைக் கேட்டு மிதிலைச் செல்வி ⋆
உலகுய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள் ⋆
செம் பவளத் திரள் வாய்த் தன் சரிதை கேட்டான் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எம் பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால் பருகுவோம் ⋆
இன் அமுதம் மதியோம் இன்றே ॥ **10.8** ॥

செறி தவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று ⋆
செழு மறையோன் உயிர் மீட்டுத் தவத்தோன் ஈந்த ⋆
நிறை மணிப் பூண் அணியும் கொண்டிலவணன் தன்னைத் ⋆
தம்பியால் வான் ஏற்றி முனிவன் வேண்ட ⋆
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் உறைவானை ⋆
மறவாத உள்ளந் தன்னை உடையோம் ⋆
மற்றுறு துயரம் அடையோம் இன்றே ॥ **10.9** ॥

‡ அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி ⋆
அடல் அரவப் பகை ஏறி அசுரர் தம்மை வென்று ⋆
இலங்கு மணி நெடுந் தோள் நான்கும் தோன்ற ⋆
விண் முழுதும் எதிர்வரத் தன் தாமம் மேவி ⋆
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
என்றும் நின்றான் அவன் இவன் என்றேத்தி ⋆
நாளும் இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் நீரே ॥ **10.10** ॥

‡ தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
திறல் விளங்கு மாருதியோடமர்ந்தான் தன்னை ⋆
எல்லை இல் சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்றது முதலாத் ⋆
தன் உலகம் புக்கதீறா ⋆
கொல் இயலும் படைத் தானைக் கொற்ற ஒள்வாள் ⋆
கோழியர் கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த ⋆
நல் இயல் இன் தமிழ் மாலை பத்தும் வல்லார் ⋆
நலந் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே ॥ **10.11** ॥

## பெரிய திருமொழி – ஊன்வாட

‡ ஊன் வாட உண்ணாதுயிர் காவல் இட்டு ⋆
உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து ⋆
தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா ⋆
தமதா இமையோர் உலகாளகிற்பீர் ⋆
கான் ஆட மஞ்ஞைக் கணம் ஆட மாடே ⋆
கயல் ஆடு கானீர்ப் பழனம் புடை போய் ⋆
தேன் ஆட மாடக் கொடி ஆடு ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ॥ **3.2.1** ॥

காயோடு நீடு கனி உண்டு வீசு ⋆
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ⋆
ஐந்து தீயொடு நின்று தவம் செய்ய வேண்டா ⋆
திரு மார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர் ⋆
வாய் ஓது வேதம் மலிகின்ற தொல் சீர் ⋆
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த ⋆
தீ ஓங்க ஓங்கப் புகழ் ஓங்கு ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ॥ **3.2.2** ॥

வெம்பும் சினத்துப் புனக் கேழல் ஒன்றாய் ⋆
விரி நீர் முது வெள்ளம் உள் புக்கழுந்த ⋆
வம்புண் பொழில் சூழ் உலகன்றெடுத்தான் ⋆
அடிப்போதணைவான் விருப்போடிருப்பீர் ⋆
பைம் பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து ⋆
படை மன்னவன் பல்லவர் கோன் பணிந்த ⋆
செம் பொன் மணி மாடங்கள் சூழ்ந்த ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ॥ **3.2.3** ॥

அரு மா நிலம் அன்றளப்பான் குறளாய் ⋆
அவுணன் பெரு வேள்வியில் சென்றிரந்த ⋆
பெருமான் திருநாமம் பிதற்றி ⋆
நுந் தம் பிறவித் துயர் நீங்குதும் என்னகிற்பீர் ⋆
கருமா கடலுள் கிடந்தான் உவந்து ⋆
கவை நா அரவின் அணைப் பள்ளியின் மேல் ⋆
திருமால் திருமங்கையொடாடு ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ‖ **3.2.4** ‖

கோ மங்க வங்கக் கடல் வையம் உய்யக் ⋆
குல மன்னர் அங்கம் மழுவில் துணிய ⋆
தாம் அங்கமருள் படை தொட்ட வென்றித் ⋆
தவ மா முனியைத் தமக்காக்ககிற்பீர் ⋆
பூ மங்கை தங்கிப் புல மங்கை மன்னிப் ⋆
புகழ் மங்கை எங்கும் திகழப் புகழ் சேர் ⋆
சேமம் கொள் பைம் பூம் பொழில் சூழ்ந்த ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ‖ **3.2.5** ‖

நெய் வாய் அழல் அம்பு துரந்து ⋆
முந்நீர் துணியப் பணி கொண்டணி ஆர்ந்து ⋆
இலங்கு மையார் மணி வண்ணனை எண்ணி ⋆
நுந்தம் மனத்தே இருத்தும்படி வாழ வல்லீர் ⋆
அவ்வாய் இள மங்கையர் பேசவும் தான் ⋆
அரு மா மறை அந்தணர் சிந்தை புக ⋆
செவ்வாய்க் கிளி நான்மறை பாடு ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ‖ **3.2.6** ‖

மௌவல் குழல் ஆய்ச்சி மென் தோள் நயந்து ⋆
மகரம் சுழலச் சுழல் நீர் பயந்த ⋆
தெய்வத் திரு மா மலர் மங்கை தங்கு ⋆
திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர் ⋆
கௌவைக் களிற்றின் மருப்பும் ⋆
பொருப்பில் கமழ் சந்தும் உந்தி நிவா வலம் கொள் ⋆
தெய்வப் புனல் சூழ்ந்தழகாய ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ॥ **3.2.7** ॥

மா வாயின் அங்கம் மதியாது கீறி ⋆
மழை மா முது குன்றெடுத்து ⋆
ஆயர் தங்கள் கோவாய் நிரை மேய்த்துலகுண்ட மாயன் ⋆
குரை மா கழல் கூடும் குறிப்புடையீர் ⋆
மூவாயிரம் நான்மறையாளர் ⋆
நாளும் முறையால் வணங்க அணங்காய சோதி ⋆
தேவாதி தேவன் திகழ்கின்ற ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ॥ **3.2.8** ॥

செரு நீல வேல் கண் மடவார் திறத்துச் ⋆
சினத்தோடு நின்று மனத்தால் வளர்க்கும் ⋆
அரு நீல பாவம் அகலப் புகழ் சேர் ⋆
அமரர்க்கும் எய்தாத அண்டத்திருப்பீர் ⋆
பெரு நீர் நிவா உந்தி முத்தம் கொணர்ந்து ⋆
எங்கும் வித்தும் வயலுள் கயல் பாய்ந்துகள ⋆
திரு நீலம் நின்று திகழ்கின்ற ⋆
தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே ॥ **3.2.9** ॥

‡ சீரார் பொழில் சூழ்ந்தழகாய ⋆
தில்லைத் திருசித்திரகூடத்துறை செங்கண் மாலுக்கு ⋆
ஆராத உள்ளத்தவர் கேட்டுவப்ப ⋆
அலை நீர் உலகுக்கருளே புரியும் ⋆
காரார் புயற் கைக் கலிகன்றி ⋆
குன்றா ஒலி மாலை ஓர் ஒன்பதோடொன்றும் வல்லார் ⋆
பாரார் உலகம் அளந்தான் அடிக் கீழ்ப் ⋆
பல காலம் நிற்கும்படி வாழ்வர் தாமே ‖ **3.2.10** ‖

## பெரிய திருமொழி – வாட மருதிடை

‡ வாட மருதிடை போகி ⋆
மல்லரைக் கொன்றொக்கலித்திட்டு ⋆
ஆடல் நன் மா உடைத்து ⋆
ஆயர் ஆநிரைக்கன்றிடர் தீர்ப்பான் ⋆
கூடிய மா மழை காத்த ⋆
கூத்தன் என வருகின்றான் ⋆
சேடுயர் பூம் பொழில் தில்லைச் ⋆
சித்திரகூடத்துள்ளானே ‖ **3.3.1** ‖

பேய் மகள் கொங்கை நஞ்சுண்ட ⋆
பிள்ளை பரிசிது என்றால் ⋆
மா நில மா மகள் ⋆
மாதர் கேள்வன் இவன் என்றும் ⋆
வண்டுண் பூ மகள் நாயகன் என்றும் ⋆
புலன் கெழு கோவியர் பாடித் ⋆
தே மலர் தூவ வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே ‖ **3.3.2** ‖

பண்டிவன் வெண்ணெய் உண்டான் என்று ⋆
ஆய்ச்சியர் கூடி இழிப்ப ⋆
எண் திசையோரும் வணங்க ⋆
இணை மருதூடு நடந்திட்டு ⋆
அண்டரும் வானத்தவரும் ⋆
ஆயிரநாமங்களோடு ⋆
திண் திறல் பாட வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே ॥ **3.3.3** ॥

வளைக் கை நெடுங்கண் மடவார் ⋆
ஆய்ச்சியர் அஞ்சி அழைப்ப ⋆
தளைத்தவிழ் தாமரைப் பொய்கைத் ⋆
தண் தடம் புக்கண்டர் காண ⋆
முளைத்த எயிற்றழல் நாகத்து ⋆
உச்சியில் நின்றுதுவாட ⋆
திளைத்தமர் செய்து வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே ॥ **3.3.4** ॥

பருவக் கரு முகில் ஒத்து ⋆
முத்துடை மா கடல் ஒத்து ⋆
அருவித் திரள் திகழ்கின்ற ⋆
ஆயிரம் பொன் மலை ஒத்து ⋆
உருவக் கருங்குழல் ஆய்ச்சி திறத்து ⋆
இன மால் விடை செற்று ⋆
தெருவில் திளைத்து வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே ॥ **3.3.5** ॥

‡ எய்யச் சிதைந்ததிலங்கை மலங்க ⋆
வரு மழை காப்பான் ⋆
உய்யப் பரு வரை தாங்கி ⋆
ஆ நிரை காத்தான் என்றேத்தி ⋆
வையத்தெவரும் வணங்க ⋆
அணங்கெழு மா மலை போலே ⋆
தெய்வப் புள் ஏறி வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே || **3.3.6** ||

ஆவர் இவை செய்தறிவார் ⋆
அஞ்சன மா மலை போலே ⋆
மேவு சினத்தடல் வேழம் ⋆
வீழ முனிந்து ⋆
அழகாய காவி மலர் நெடுங்கண்ணார் ⋆
கை தொழ வீதி வருவான் ⋆
தேவர் வணங்கு தண் தில்லைச் ⋆
சித்திரகூடத்துள்ளானே || **3.3.7** ||

பொங்கி அமரில் ஒருகால் ⋆
பொன் பெயரோனை வெருவ ⋆
அங்கவன் ஆகம் அளைந்திட்டு ⋆
ஆயிரம் தோள் எழுந்தாட ⋆
பைங்கண் இரண்டெரி கான்ற ⋆
நீண்ட எயிற்றொடு பேழ் வாய்ச் ⋆
சிங்க உருவின் வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே || **3.3.8** ||

கரு முகில் போல்வதோர் மேனி ⋆
கையன ஆழியும் சங்கும் ⋆
பெரு விறல் வானவர் சூழ ⋆
ஏழ் உலகும் தொழுதேத்த ⋆
ஒரு மகள் ஆயர் மடந்தை ⋆
ஒருத்தி நிலமகள் ⋆
மற்றைத் திரு மகளோடும் வருவான் ⋆
சித்திரகூடத்துள்ளானே ‖ **3.3.9** ‖

‡ தேன் அமர் பூம் பொழில் தில்லைச் ⋆
சித்திரகூடம் அமர்ந்த ⋆
வானவர் தங்கள் பிரானை ⋆
மங்கையர் கோன் மருவார் ⋆
ஊன் அமர் வேல் கலிகன்றி ⋆
ஒண் தமிழ் ஒன்பதோடொன்றும் ⋆
தான் இவை கற்று வல்லார் மேல் ⋆
சாரா தீவினை தாமே ‖ **3.3.10** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

அள்ளல் வாய்
அன்னம் இரை தேர் அழுந்தூர் எழும் சுடரை ⋆
தென் தில்லைச் சித்திரகூடத்தென் செல்வனை ‖ **67** ‖

திரு புண்டரீகவல்லி சமேத கோவிந்தராசன் திருவடிகளே சரணம்